# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 28.09.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

கடந்த ஜுமுஆவில், ஜுமுஆ தொழுகையை நடத்துவதற்காக நான் இங்கு பள்ளிவாசலுக்கு வந்த போது காரிலிருந்து நான் இறங்கியதும் பெரும் எண்ணிக்கையில் பத்திரிகையாளர்கள் அங்கு வந்திருப்பதை நான் பார்த்தேன். அமீர் சாஹிப் அவர்களிடம் இதுபற்றி நான் கேட்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக அமெரிக்காவில் உள்ளத்தைப் புண்படுத்தும் வகையில் வெளியிடப்பட்ட ஃபிலிம் தொடர்பாக முஸ்லிம்கள் மேற்கொண்டுள்ள எதிர்நடவடிக்கைகளை பார்த்த இவர்கள் அஹ்மதிகளின் எதிர்நடவடிக்கை எவ்வாறு இருக்கின்றது? என்பதைப் பார்ப்பதற்காக வந்துள்ளனர் என்று அமீர் சாஹிப் கூறினார்கள். அதற்கு நான் நல்லது. இந்த தலைப்பில் தான் நான் குத்பா கொடுக்க இருக்கிறேன். அதில் அஹ்மதிகள் எத்தகு எதிர்நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்பதைப் பற்றி கூறுவேன் என்று இவர்களிடம் கூறுங்கள் என்று கூறினேன். இந்த அளவு பெரும் எண்ணிக்கையில் மீடியாவை இங்கு ஈர்த்துக் கொண்டு வந்திருப்பதும் கூட அல்லாஹ்வின் வேலையாகும். மேலும் அவனே இந்த தலைப்பில் சில விசயங்களை நான் கூற வேண்டும் என்பதையும் எனது உள்ளத்தில் போட்டான். முதலில் நான் வேறு விசயத்தைக் கூற வேண்டும் என்று நினைத்திருந்தேன். ஆனால், ஒரு நாள் முன்புதான் இந்த தலைப்பில் சிறிது கூற வேண்டும் என்று எனது கவனம் திரும்பியது. எவ்வாறிருப்பினும் இது அல்லாஹ்வின் வேலையாகும். எவ்வாறு அவன் விரும்புகின்றானோ அவ்வாறு செய்கின்றான். பிறகுள்ள நிலைமைகள் இந்த தலைப்பில் நான் பேசுவதில் இறைவனின் உதவி இருக்கின்றது என்பதை நிரூபித்திருக்கின்றது. சுருக்கமான நேரத்தில் மிக சுருக்கமாகத்தான் விசயங்களைக் கூற முடியும். ஆனால் கூறப்பட்ட விசயங்களின் சுருக்கத்தை அல்லது எந்த தூதுச் செய்தியை நான் கூற விரும்பினேனோ அதை அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் உலகம் மட்டுமல்லாமல் மற்றவர்களிடத்திலும் மிகவும் விரிவான முறையில் எட்ட வைத்து விட்டான்.

எவ்வாறிருப்பினும், ஜுமுஆவிற்குப் பிறகு நான் பள்ளிவாசலிலிருந்து வெளியே வந்த சமயத்தில் அமீர் சாஹிப் அவர்கள் மீடியாவிலிருந்து வந்திருப்பவர்கள் 2 அல்லது 3 நிமிடங்கள் உங்களிடம் நேரடியாக சில விசயங்களைப் பேச விரும்புகின்றார்கள் என்று கூறினார்கள். சில விசயங்களைக் கேட்க விரும்புகின்றார்கள் என்று கூறினார்கள். நான் அவர்களிடம் குத்பாவிலேயே எல்லா விசயங்களையும் கூறி விட்டேன் என்று கூறினேன். ஏனென்றால் மீடியாவைச் சார்ந்தவர்கள் மேலே பால்கனியில் நிற்பதையும், கேமரா மூலம் புகைப்படம் எடுப்பதையும், ரிக்கார்டிங் செய்வதையும், மொழியாக்கத்தைக் கேட்பதையும் நான் பார்த்தேன். இவர்களுக்கு தூதுச் செய்தி கிடைத்து விட்டது. மேற்கொண்டு இவர்கள் வேறு என்ன கேட்க விரும்புகின்றார்கள் என்று நான் கேட்டேன். எவ்வாறிருப்பினும், நான் வருவேன் என்று கூறி இவர்களை அறைக்குள் உட்கார வைத்து விட்டதால் நானும் சரி பார்க்கலாம் என்று கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும் மதிப்பையும் நிலைநாட்டுவதற்காக வேறு சில விசயங்களைக் கூற வேண்டியது வந்தாலும் நாம் கூறுவோம் என்று நான் நினைத்தேன். பெருமானார் (ஸல்) அவர்களின் உயர் தகுதி தொடர்பாகவும், இஸ்லாமிய போதனைகளைப் பற்றியும் இந்த நேர்காணல் மூலமாக உலகிற்கு சிறந்த தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் என்றால், அது நல்ல விசயம் தான். அதற்காக நான் அவர்களை சந்திக்கின்றேன் என்று கூறினேன்.

நான் அறைக்குள் சென்ற போது பத்திரிகை நிரூபர்களைத் தவிர டி.வி. சேனல்களின் பிரதிநிதிகளும் இருந்தனர். B.B.C. –ன் ஏற்பாட்டின் கீழ் இயங்கும் News Night என்ற சேனலின் பிரதிநிதி, B.B.C. –ன் பிரதிநிதி, நியூசிலாந்து நேசனல் டி.வியின் பிரதிநிதி, பிரான்ஸிலுள்ள டி.வி.யின் பிரதிநிதி மற்றும் இன்னும் பல பிரதிநிதிகளும் அமர்ந்திருந்தனர். நியூசிலாந்தின் பிரதிநிதி எனக்கு வலப்பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அவருக்கு முதலாவதாக கேட்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் என்னிடம் நீங்கள் என்ன தூதுச் செய்தியைக் கூற விரும்புகின்றீர்கள்? என்ற கேள்வியைக் கேட்டார். தூதுச் செய்தியை நீங்கள் கேட்டுள்ளீர்கள். எனது குத்பாவின் மொழியாகத்தைக்

கேட்டுள்ளீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதி பற்றி நான் விளக்கிக் கூறியிருக்கின்றேன். அவர்களது தகுதி மிகவும் உயர்வானது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அழகிய முன்மாதிரியானது ஒவ்வொரு முஸ்லிமும் பின்பற்றுவதற்கு தகுதியுடையதாகும். முஸ்லிம்கள் தங்களது துக்கத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தும் வகையிலுள்ள அவர்களது எதிர்நடவடிக்கை ஒருவகையில் சரியானதுதான். அவ்வாறான ஒரு நிலை உருவாக வேண்டும். ஆனால் அதை சில இடங்களில் அவர்கள தவறான விதத்தில் வெளிப்படுத்துகின்றனர். ஹஸரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எங்களது உள்ளத்திலுள்ள உயர் தகுதி வரை இந்த உலகவாதிகளின் பார்வை செல்ல முடியாது. இந்த விசயத்தால் எந்த அளவு எங்களுக்கு வேதனை ஏற்பட்டுள்ளது? எவ்வாறு நாங்கள் துயரம் அடைந்துள்ளோம் என்பதைப் பற்றிய உணர்வு இந்த உலவகாதிகளுக்கு இருக்கவே முடியாது. இப்படிப்பட்ட செயல்கள் உலகின் அமைதியை சீர்குலைத்து விடுகின்றது என்று நான் கூறினேன்.

நியூசிலாந்தின் பிரதிநிதியாக வந்திருந்த அவர் மிகவும் கடுமையான சொற்களில் இவர்கள் நரகத்திற்கு செல்வர் என்று நீங்கள் கூறினீர்கள். இது மிகவும் கடுமையான சொற்களாகும் என்று கூறினார். அவ்வகையில் நீங்களும் அவர்களை சார்ந்தவர்களாக ஆகிவிட்டீர்கள் என்ற சொற்களை அவர் கூறாமல் இருந்தாலும் அவரது பேசும் தொனி அதை பிரதிபலித்தது. அவர் மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்கு நான் அல்லாஹ்வின் நேசத்திற்குரியவர்கள் தொடர்பாக இப்படிப்பட்ட விசயங்களை ஒருவர் பேசுகின்றபோது, அவர்களை எள்ளி நகையாடும் போது அப்படிப்பட்ட செயல்களிலிருந்து அவர்கள் விலகாமல் இருந்தால், எவ்வளவு புரிய வைத்தாலும் அதை புரிந்து கொள்ளாமல் பிடிவாதமாக இருந்தால் பிறகு அல்லாஹ்வுடைய விதியும் செயல்படும். அப்போது தண்டனையும் வரலாம். அப்படிப்பட்ட மக்களை அல்லாஹ் பிடிக்கின்றான் என்று நான் கூறியதைக் கேட்டு அவர் அமைதியாக இருந்து விட்டார்.

ஆனால் நான் கூறிய விசயத்தைக் கேட்டு அவருக்கு சிறிது அச்சம் ஏற்பட்டிருப்பது போன்று எனக்கு தெரிந்தது. அவர் நியூசிலாந்தின் நேசனல் டி.வி. க்கு அனுப்பிய செய்தி டி.வி.யில் ஒளிபரப்பானது. ஜமாஅத் தொடர்பாக முதன்முறையாக அங்குள்ள நேசனல் டி.வி.யில் செய்தி ஒளிபரப்பாகி உள்ளது. நமது அறிமுகம் அங்கு ஏற்பட்டு விட்டது என்று அங்குள்ள ஜமாஅத்திற்கும் இவ்வகையில் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. குத்பாவிலுள்ள கருத்துக்களையும், என்னுடன் நடந்த நேர்காணலையும் அவர்கள் ஒளிபரப்பியுள்ளனர். இப்படிப்பட்ட மக்கள் நரகத்திற்கு செல்வார்கள் என்ற சொற்றொடரையும் அவர்கள் தமது செய்தியில் ஒளிபரப்பினர். இதனை அவர்கள் ரிக்கார்டு செய்து வைத்திருந்தனர். சில நேரங்களில் முஸ்லிம் அல்லாத பிரதிநிதிகளிடம் இல்லாத அல்லது அவர்கள் வெளிப்படுத்திக் காட்டாமல் இருக்கின்ற அந்த கண்ணியமான இயல்பு இவரிடம் இருக்கின்றது. இந்த குறிப்பிட்ட சொற்றொடருக்கு முன்னும் பின்னும் கூறப்பட்டவற்றைக் கூறாமல் விட்டு விட்டால் அதனால் எதிர்மறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். அதை அழிக்கும் வகையில் அல்லாஹ் அவரது உள்ளத்தில் இந்த விசயத்தையும் போட்டு விட்டான். என்னுடன் நடந்த நேர்காணலில் நான் கூறிய இந்த விசயத்தையும் அவர்கள் காட்டினார்கள். நான் கூறிய சொற்களை அவர்கள் அப்படியே திரும்பப் போட்டுக் காட்டினார்கள். அதில் நான் கூறிய விசயம் இதுவாகும்.

நாங்கள் தீவிரவாதச் செயல்களையும், உடைப்பது, எரிப்பது போன்ற செயல்களையும் விரும்புபவர்கள் அல்ல. எந்தவொரு அஹ்மதியையும் இப்படிப்பட்ட குழப்பத்தில் ஈடுபடுவதையோ அல்லது குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய எதிர்நடவடிக்கையில் பங்குபெறுவதையோ உங்களால் ஒருபோதும் பார்க்க முடியாது. செய்திகளை வாசித்தவர் எனது இந்த பதிலைக் காட்டி விட்டு பிறகு இதுபற்றி விமர்சனம் செய்தார். அதாவது, இந்த ஜமாஅத் முஸ்லிம்களில் ஒரு தனி ஜமாஅத் ஆகும். முஸ்லிம்கள் இவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதில்லை. ஆனால் இவர்களது கலீஃபாவின் குரல், மேலும் அவர் கூறியுள்ள இந்த தூதுச் செய்தி அஹ்மதிகளைத் தவிர மற்ற முஸ்லிம்களிடமும் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்துகின்றதா? இல்லையா? என்று நாம் பார்ப்போம் என்று அவர் கூறினார். அவர் மற்ற முஸ்லிம்கள் செய்கின்ற உடைப்பது, எரிப்பது போன்ற காட்சிகளையும் டி.வி.யில் காட்டினார். மவ்லவிகள் ஊர்வலமாக செல்வதையும் அவர்கள் அதில் முழக்கமிடுவதையும் அவர் காட்டினார்.

எவ்வாறிருப்பினும், நான் ஏற்கனவே கூறியது போன்றே இதன் மூலமாக இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி நியூசிலாந்து நாட்டிலும், சேட்டிலைட் மூலமாக அதன் அருகிலுள்ள நாடுகளிலும் அவர்களது இணையதளம் மூலமாக உலகின் பல பகுதிகளிலும் எட்டி விட்டது. நாம் முயற்சி செய்திருந்தால் கூட அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் மற்றும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தி இந்த ரீதியில் மக்களை சென்றடைந்திருக்க முடியாது. இவ்வகையில் நியூசிலாந்து ஜமாஅத் நாட்டின் எல்லா பகுதிகளிலும் அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகத்தையும் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியையும் எட்ட வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

இவ்வாறே நியூசிலாந்திற்கு அருகிலுள்ள நாடுகளிலும் இந்த தூதுச் செய்தியை அவர்கள் கேட்டிருப்பார்கள். அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்பண்புகளை எடுத்துக்கூறி இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை இந்த மக்களுக்கு எட்ட வைப்பதற்கான முழுமையான ஒரு செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும். இங்குள்ள ஒரு சேனலான New Night –ன் பிரதிநிதி நான் அந்த ஃபிலிமை பார்த்தேன். இந்த அளவு கூச்சலிடுவதற்கு அதில் எந்தவொரு விசயமும் இல்லையே! முஸ்லிம்கள் இந்த அளவு எதிர்நடவடிக்கையை வெளிப்படுத்த வேண்டியதில்லை என்றார். மேலும் நீங்களும் மிக விளக்கமாக இதுபற்றி குத்பா கொடுத்துள்ளீர்கள். சில இடங்களல் மிகவும் கடுமையான சொற்களில் இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளீர்கள். இரு ஒரு லேசான நகைச்சுவை தான் என்றார்.

இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இதுதான் இந்த மக்களது ஒழுக்கத்தின் தரத்தின் நிலைமையாகும். நான் அவரிடம் நீங்கள் இந்த ஃபிலிமை எப்படிப் பார்த்தீர்கள்? உங்களது தரம் எத்தகையது? என்று எனக்கு தெரியவில்லை. முஸ்லிம்களின் பார்வையில் அவர்களது உள்ளத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இருக்கும் உயர்வான தகுதியையும் அவர்கள் மீது ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் இருக்கின்ற நேசத்தையும் கண்ணியத்தையும் உங்களால் புரிந்து கொள்ள முடியாது. நான் அவரிடம் கூறினேன். நான் அந்தப் படத்தைப் பார்க்கவில்லை. ஆனால் அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் என்னிடம் கூறிய ஒன்றிரண்டு விசயங்கள் சகித்துக் கொள்ள முடியாதவையாகும். நீங்கள் அதில் அப்படிப்பட்ட எந்த விசயமும் அதில் இல்லை என்று கூறுகின்றீர்கள். இந்த விசயத்தைக் கேட்ட பிறகு ஒருபோதும் அந்த ஃபிலிமை பார்ப்பதற்கான தைரியம் எனக்கு இருக்காது. அதில் சொல்லப்பட்ட விசயங்களைக் கேட்கும்போதே இரத்தம் கொதிக்கின்றது. நான் அவரிடம் கூறினேன். உங்களது தந்தையாரை ஒருவர் ஏசிப்பேசினால் அவரைப் பற்றி தீய விசயங்களை, வீணான தரக்குறைவான விசயங்களைக் கூறினால் அது தொடர்பாக உங்களது எதிர்நடவடிக்கை எப்படியிருக்கும்? நீங்கள் உங்களது எதிர்நடவடிக்கையைக் கண்டிப்பாக வெளிப்படுத்திக் காட்டுவீர்கள். அது சரியா? இல்லையா? என்று கூறுங்கள். ஒரு முஸ்லிமின் பார்வையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது உயர் தகுதி இதை விட மிகவும் உயர்வானதாகும். அந்த இடத்தை நீங்கள் அடையவே முடியாது. இரண்டாவது முறையாக அவர் அந்த ஃபிலிம் தொடர்பாக பேச ஆரம்பித்ததும் நான் அவரிடம் நான் உங்களிடம் சொல்லி விட்டேன். உங்களது தந்தைக்கு எதிராக எவராவது பேசினால் அதை நீங்கள் சகித்துக் கொள்வீர்களா? என்று கேட்டேன். ஆம் அல்லது இல்லை என்று எந்த பதிலையும் அவர் கூறவில்லை. ஆனால் அதற்கு பிறகு அவர் அமைதியாக இருந்து விட்டார். இந்த பிரதிநிதி இது தொடர்பாக ஒருவேளை மீடியாவில் இதுபற்றி எந்த செய்தியையும் தராமல் இருந்திருக்கலாம். உங்களது தந்தையாரை எவராவது ஏசிப் பேசினால் எதிர்நடவடிக்கையில் ஈடுபடுவீர்களா? என்ற எனது இந்த சொற்றொடரை பல இடங்களில் மற்ற மீடியாக்கள் எடுத்துக் கூறியிருக்கின்றன. இணையதளத்திலும் அதை போட்டுள்ளார்கள்.

எவ்வாறிருப்பினும் இன்டர்நெட்டிலும், சில இணையதள பத்திரிகைகளிலும் இதுபற்றி பல்வேறு கருத்துக்களை கூறக்கூடியவர்களும், பாகிஸ்தானைச் சேர்ந்த ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் எனது குத்பாவை மேற்கோள் காட்டி, பிரஸ் மீட்டிங்கில் கூறிய கருத்துக்களை எடுத்துக் கூறி இந்த விசயத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலைபாடு என்ன என்பதை சிறந்த முறையில் உலகிற்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. இன்டர்நெட்டில் இது தொடர்பாக கருத்துக்களை கூறியுள்ள பலரும் இதனைப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். ஒவ்வொரு அறிவுள்ள மனிதனும் கூறும் விசயத்தைத்தான் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது கூறியுள்ளார் என்று சிலர் எழுதியுள்ளனர். ஓர் அஹ்மதி எனக்கு இவ்வாறு எழுதியுள்ளார். அவர் கூறுகின்றார்: நான் எல்லாரது கருத்துக்களையும் கேட்டேன். எல்லா செய்திகளையும் பார்த்தேன். ஆலிம்கள், தலைவர்கள் மற்றும் அனைவரது

விளக்கங்களையும் கேட்டேன். பல விசயங்களையும் அவர்கள் பேசினார்கள். ஆனால் எவருமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓதுவதன் பக்கம் கவனமூட்டவில்லை. எனவே, இதன் பக்கம் அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டுமே கவனமூட்டியுள்ளது. ஜமாஅத் சகோதரர்களின் எதிர்நடவடிக்கை இப்படியும் இருக்க வேண்டும். அதாவது அதிகமதிகம் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தரூது ஓத வேண்டும். எவர்களை நீங்கள் முஸ்லிம் அல்லாதவர் என்று கூறுகின்றீர்களோ அவர்கள்தான் உண்மையான இஸ்லாமிய எதிர்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்கள் என்றும் சிலர் எழுதியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும், இதுபற்றி சிறப்பான முறையில் செய்தி பரவி விட்டது. இவ்வாறு உலகத்தின் முன்னால் ஒரு உண்மையான முஸ்லிமின் உண்மையான எதிர்நடவடிக்கையும் வந்து விட்டது. அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துக் கூறுகின்ற இஸ்லாத்தின் உண்மையான போதனைகள் பற்றியும் உலகிற்கு தெரிந்து விட்டது. உலகத்திற்கும் இஸ்லாமிய உலகிற்கும் ஒரு உண்மையான முஸ்லிமின் சரியான எதிர்நடவடிக்கை என்ன? எப்படி இருக்க வேண்டும்? என்பதும் தெரிந்து விட்டது. நான் ஏற்கனவே கூறியது போன்றே இது அல்லாஹ்வின் குறிப்பான அருளும் அவனது உதவியுமேயாகும். அதன் மூலமாகவே இத்தகைய கவரேஜ் கிடைத்துள்ளது. அவ்வாறில்லையென்றால், நாம் முயற்சி செய்தாலும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத் எடுத்துக் கூறுகின்ற சரியான இஸ்லாமிய நடவடிக்கை தொடர்பாக உலகிற்கு தெரியாமல் போயிருக்கும் அல்லது இவ்வளவு விரிவான முறையில் இதை நாம் உலகத்திற்கு எட்ட வைத்திருக்க முடியாது. இந்த பணிகளை மேலும் முன்னேற்றம் அடையச் செய்வதும், இந்த கவரேஜிலிருந்து பலன் பெறுவதும் ஒவ்வொரு இடத்திலுள்ள ஜமாஅத் மற்றும் ஒவ்வொரு அஹ்மதியுடைய பணியாகும். தலைமையகத்தின் தரப்பிலிருந்தும் இது தொடர்பான முயற்சிகளுக்கான வழிகாட்டல் மற்றும் வழிமுறைகளைக் கூறுவது ஆகியவற்றை பொருத்தவரையில் நான் குத்பாவை வெளியிடுமாறு கூறியுள்ளேன். இந்த வழிகாட்டல் மற்றும் இதற்கான வழிமுறை அலுவலகத்திலிருந்து ஜமாஅத்திற்கு கிடைப்பதற்கு அல்லது ஜமாஅத் சகோதரர்களுக்கு அவர்களது ஜமாஅத் தரப்பிலிருந்தும் இதுபற்றிய வழிகாட்டல் கிடைப்பதற்கு சிறிது கால அவகாசம் தேவைப்படலாம். சில நாட்கள் ஆகலாம். நான் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற எல்லா அஹ்மதிகளும் அல்லாஹ் நமக்கு வழங்கியுள்ள இந்த சந்தர்ப்பத்திலிருந்து பலனடைந்தவாறு நான் கடந்த குத்பாவில் கூறியதற்கேற்ப உங்களது செயல் மூலமாக உலகத்தின் முன்னால் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எடுத்துக் கூறுங்கள்.

ஆனால் அத்துடன் தலைமையகத்துடன் தொடர்புள்ள அலுவலகங்களும், ஜமாஅத்துகளும் உடனடியாக கவனம் செலுத்தியவாறு குத்பாவின் மொழியாக்கத்தை தத்தமது மொழிகளில் செய்து விரிவாக அதை வெளியிட வேண்டும். அதில் பிரஸ் தொடர்பாகவும் எழுத வேண்டும். உணர்வுள்ள ஒவ்வொரு நபருக்கும் இஸ்லாமிய வழிமுறையை எட்ட வையுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் அழகிய அம்சங்களைப் பார்க்க வேண்டுமென்றால் உண்மை மற்றும் வரலாற்றின் ஒளியில் அமைந்துள்ள புத்தகங்களையும் நாங்கள் உங்களுக்கு வழங்குகிறோம் அல்லது எங்களால் வழங்க முடியும் என்பதை தெரிவியுங்கள். இவ்வாறு நமது புத்தகங்கள் உள்ள பல்வேறு ஜமாஅத்துகளின் இணையதளங்களின் முகவரியையும் தெரியப்படுத்துங்கள். நான் இது தொடர்பாக முதலிலேயே வழிகாட்டல்களை வழங்கியிருந்தேன்; வழங்கி விட்டேன்.

சில மக்கள் இது தொடர்பாக தங்களது ஆலாசனைகளையும் தெரிவித்துள்ளனர். இந்த குத்பா மூலமும் பத்திரிகைத் துறையைச் சேர்ந்தவர்களுடன் நடைபெற்ற கேள்வி-பதில் நிகழ்ச்சி மூலமும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிலை பற்றி உலகத்திற்கு விரிவாக தெரிய வந்து விட்டதால் இதன் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் உள்ள அழகிய அம்சங்களை வெளிப்படுத்திக் காட்ட முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இதிலிருந்தும் பலன்பெற வேண்டும். ஜமாஅத் தங்களது பகுதிகளிலுள்ள நூலகங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான நூல்களை வைக்க வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் இந்த நூல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை நூலகங்களில் வைக்க வேண்டும். ஒரு பிரிவினருக்கு இந்த நூல்களை இலவசமாக வழங்க வேண்டுமென்றால் அவ்வாறும் செய்யலாம். குறிப்பாக எந்த நூல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு விட்டதோ அல்லது வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோ அவற்றை அதிகமாக பரப்ப வேண்டும். உதாரணமாக ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)

அவர்களின் நூலான Life of Muhammad ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. இவ்வாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களது ஸீரத்துந்நபி என்ற நூலின் சில பகுதிகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மற்ற நூல்களையும் வகாலத்தே தஸ்னீஃப் விரைவாக மொழிபெயர்த்து வெளியிட வேண்டும்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் நூலான Life of Muhammad ஒரு சுருக்கமான நூலாகும். அதில் பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் எல்லா அம்சங்களும் அடங்கியுள்ளது. Introduction to the Study of Holy Quran என்ற நூலின் ஒரு சிறு பகுதியாக இந்த நூல் உள்ளது. இதில் வரலாறும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. பெருமானாரின் வாழ்க்கையும் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இதை படிப்பதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையில் ஒவ்வொரு அம்சமும் தெளிவாக நமக்கு முன்னால் வந்து விடும். இதை விரிவான அளவில் வெளியிட வேண்டும். வகாலத்தே இஸாஅத் மற்றும் தஸ்னீப் எந்தெந்த மொழிகளில் இந்நூல் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைப் பற்றி எனக்கு அறிக்கை தர வேண்டும். இருப்பு இல்லையென்றால் உடனடியாக இதை வெளியிட வேண்டும். ஜெர்மன் மொழியிலும் இதன் மொழியாக்கம் உள்ளது. பிரெஞ்ச் மொழியிலும் இருக்கின்றது என்று நான் நினைக்கின்றேன். எவ்வாறிருப்பினும், இதைப் பற்றிய அறிக்கையை எனக்கு தர வேண்டும்.

உலகின் முன்னால் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் அழகிய அம்சங்களை வைக்க வேண்டியது நமது பணியாகும். நாம் முயற்சி செய்து இந்தப் பணியை நிறைவேற்ற வேண்டும். இன்று இந்தப் பணியை முழு ஈடுபாட்டுடன் அஹ்மதிய்யா ஜமாஅத்தால் மட்டும் தான் செய்ய முடியும். இதற்காக எல்லா வகையான நிகழ்ச்சிகளையும் உருவாக்க முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். செமினார்களும் மாநாடுகளும் நடத்த வேண்டும். மற்றவர்களை பெரும் எண்ணிக்கையில் இவற்றில் கலந்து கொள்ள அழைக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு சிறிய பிரசுரத்தின் வடிவில் எனது கடந்த வார குத்பாவை வெளியிட்டு எவ்வாறு இதற்கு முன்னால் அமைதி தொடர்பாக பிரசுரங்கள் வழங்கப்பட்டதோ அவ்வாறு இந்த குத்பாவையும் நீங்கள் விநியோகம் செய்ய வேண்டும். இந்தப் பணியை செய்வதில் அதிக கால தாமதம் ஏற்படக் கூடாது. மாறாக ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்குள் இந்தப் பணி நடைபெற முடியும். அதை செய்ய வேண்டும். பெரிய நாடுகளில் இதை வெளியிடும் பணியை மிகவும் எளிதாக செய்ய முடியும்.

இந்த மக்கள் தங்களது தீய செயல்களிலிருந்து விலகாமல் இருக்கின்றார்கள். விலகவும் மாட்டார்கள். பொதுவாக முஸ்லிம்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்ற எதிர்நடவடிக்கையை தங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டு இந்த மக்கள் நமது உள்ளங்களை மேலும் காயப்படுத்துவதற்கு தயாராக உள்ளனர் என்றே தெரிகிறது. தங்களது அசுத்தமான செயல்களை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு பரப்பிக் கொண்டே செல்கின்றனர். இப்போது இரண்டு நாட்களுக்கு முன்னரும் ஸ்பெயினில் உள்ள ஒரு பத்திரிகையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கேலிச் சித்திரம் வரைந்து அதை வெளியிட்டுள்ளது. நகைச்சுவை என்ற பெயரில் முஸ்லிம்களின் எதிர்நடவடிக்கைக்கு பதில் கூறும் வகையில் இது செய்யப்பட்டுள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது. நாம் இவர்களது வாயை அடைப்பதற்கும் குறைந்தபட்சம் நல்ல இயல்புள்ள மக்களுக்கும் படித்த மக்களுக்கும் இந்த தவறான வழிமுறை உலகின் அமைதியை சீர்குலைத்து விடுகிறது என்பதை எடுத்துக் கூறுவதற்கும் முழுமையான முறையில் முயற்சி செய்ய வேண்டும். எந்த அளவு சாத்தியம் உள்ளதோ அந்த அளவு இவர்களது அநீதியான வழிமுறை தொடர்பாக உலகிற்கு நாம் தெரிவிக்க வேண்டும். இங்கு U.K.விலும், காமன்வெல்த் நாடுகளிலும் ராணியின் வைர விழா கடந்த சில நாட்களுக்கு முன்னால் கொண்டாடப்பட்டது. முழு வருடமும் இதுபற்றிய பேச்சு இருந்து கொண்டிருக்கும். இப்போதும் இதன் பக்கம் கவனம் இருந்து வருகிறது.

விக்டோரியா மஹாராணிக்கு வைர விழா நடந்த சமயத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஃபா கேஸரிய்யா அதாவது மஹாராணிக்கு ஓர் அன்பளிப்பு என்ற பெயரில் ஒரு நூலை எழுதி மஹாராணிக்கு அதை அனுப்பி வைத்தார்கள். அந்த நூலில் அவர்கள் ராணியின் நீதியுடைய ஆட்சியைப்

புகழ்ந்து கூறியிருந்ததுடன் இஸ்லாத்தின் தூதுச் செய்தியையும் அவர்களுக்கு எட்ட வைத்தார்கள். உலகில் அமைதியை ஏற்படுத்துவது, பல்வேறு மதங்களுக்கு இடையில் பரஸ்பரம் இருந்து வரும் தொடர்புகள், மார்க்கப் பெரியார்கள், நபிமார்கள் ஆகியோரை கண்ணியப்படுத்துவது, அவர்களை மதிப்பது ஆகியவற்றைப் பற்றியும் அந்நூலில் அன்னார் கவனமூட்டியிருந்தார்கள். அமைதியை நிலைநாட்டுவதற்குரிய வழிமுறைகள் என்ன என்பதைப் பற்றியும் அதில் அவர்கள் விளக்கமாக கூறியிருந்தார்கள்.

இப்போது எலிசபெத் ராணியின் வைர விழாவின் போது துஃபா கேஸரிய்யா என்ற நூலின் மொழிபெயர்ப்பை அழகாக அச்சிட்டு அழகான பைண்டிங் செய்யப்பட்டு ராணிக்கு அனுப்பப்பட்டது. அத்துடன் எனது கடிதமும் அனுப்பப்பட்டது. ராணியுடன் சம்பந்தப்பட்ட அந்த துறையிடமிருந்து நன்றி தெரிவித்து எனக்கு பதிலும் வந்தது. மேலும் ராணியின் நூல்களின் தொகுப்புடன் இந்த நூலும் வைக்கப்பட்டுள்ளது என்றும் ராணி இதை படிப்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள். அவர்கள் அதைப் படிக்கின்றார்களா? இல்லையா? என்பது நமக்கு தெரியாது. ஆனால் நமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு நாம் முயற்சி செய்துள்ளோம்.

அந்தக் காலத்தில் உலகத்தில் அமைதியின்மையின் எத்தகு நிலை இருந்து வருகிறதோ அதே நிலைதான் இன்றும் இருந்து வருகிறது. இன்னும் சொல்வதென்றால் அதை விட அதிகமான அமைதியின்மை பெருகி வருவதை பார்க்கின்றோம். இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்துவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, அவர்களை பரிகாசம் செய்வது ஆகிய செயல்களை இந்த மக்கள் செய்து கொண்டே செல்கின்றனர். அதில் வரம்பு மீறி வருகின்றனர். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த தூதுச் செய்தியை பரப்புவது இன்று மிகவும் அவசியமானதாகும். அமைதியை ஏற்படுத்துவது, மதங்களுக்கு கண்ணியமளித்தல் ஆகியவை தொடர்பாக அந்த நூலிலுள்ள பகுதியை ஒரு பிரசுரத்தின் வடிவில் அச்சிட்டு இங்கும் உலகம் முழுவதும் இதை விநியோகம் செய்ய வேண்டியது அவசியமானதாகும். அந்நூலில் இது தொடர்பாக மாநாடுகளை எப்படி நடத்த வேண்டும் என்பது பற்றியும் எழுதி பிரசுர வடிவில் அச்சிட்டு இங்கும் உலகின் பல்வேறு இடங்களிலும் விளம்புவது அவசியமாகும். இது தொடர்பாகவும் உடனடியாக பணி நடைபெற வேண்டும். இந்த தூதுச் செய்தி அதிகபட்சம் 4 அல்லது 5 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நபிமார்களைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஒரு உதாரணத்தைக் கூறியுள்ளார்கள். அதாவது ஒரு அரசாங்கத்தின் பெயரில் அதன் தரப்பிலிருந்தும் எவராவது ஒரு பொய்யான சட்டத்தை இயற்றி அதை பரப்புகின்றார் என்றால் அல்லது அந்த நபர் தன்னை அரசாங்கத்தில் பணிபுரியும் ஒருவராக நிரூபித்தால் அல்லது நிரூபிக்க முயற்சி செய்தால் அரசாங்கம் அவருக்கு எதிராக நடவடிக்கையில் இறங்கும். அப்படிப்பட்ட நபர் அல்லது பிரிவினர்க்கு எதிராக அது நடவடிக்கை எடுக்கும். பிறகு தவறான விசயங்கள் தன்னுடன் தொடர்புபடுத்தி கூறப்படுவதை மேலான இறைவன் எவ்வாறு சகித்துக் கொள்வான்? எவ்வாறு அதற்கு அவன் முழுமையான சுதந்திரத்தை வழங்க முடியும்?

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் இறைவனிடமிருந்து தூதுச் செய்தியைக் கொண்டு வந்திருப்பதாக வாதம் செய்கின்ற போது, அவர்களது ஜமாஅத்தும் வளர்ச்சி அடையும் போது இந்த ஜமாஅத் அல்லது இந்த மக்கள் இறைவனிடமிருந்து வந்தவர்கள் என்பதை அது நிரூபிக்கின்றது. எனவே, இறைவன் புறமிருந்து வந்தவர்களுக்கு கண்ணியமளிக்க வேண்டும். அதன் மூலமாக உலகின் அமைதி நிலைபெறும். இது தொடர்பாக எவ்வாறு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்பது பற்றியும் நபிமார்களின் உயர்வான தகுதி என்ன என்பது பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியவற்றிலிருந்து ஒரு பகுதியை இப்போது உங்கள் முன்னால் நான் வைக்கின்றேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தொன்றுதொட்டே இறைவனுடைய நடைமுறையில் இந்த சட்டம் உளளது. அதாவது உலக அரசாங்கங்கள், தான் கூறாத ஒன்றை தன்னுடன் தொடர்புபடுத்திக் கூறுவதை சகித்துக் கொள்ள முடியாத போது, அல்லாஹ் அப்படிப்பட்ட விசயத்தை எப்படி சகித்துக் கொள்வான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவனது தொன்றுதொட்ட நடைமுறையில் இந்த சட்டம் உள்ளது. அதாவது தன்னை நபியென்று பொய்யாக வாதம் செய்கின்ற ஒருவருக்கு அவன் கால அவகாசம் வழங்குவதில்லை. அப்படிப்பட்ட நபர் விரைவில் பிடிக்கப்படுவார். இறை தண்டனைக்கு ஆளாகி விடுவார். இந்த

சட்டத்தின் அடிப்படையில் ஏதாவது ஒரு காலக்கட்டத்தில் தன்னை நபியென்று வாதம் செய்துள்ள எல்லாரையும் கண்ணியமிக்க பார்வையுடன் பார்க்க வேண்டும். அவர்களை உண்மையாளர்களாக கருத வேண்டும். அப்படிப்பட்ட மக்கள் தாங்கள் நபியாக இருப்பதாக வாதம் செய்தார்கள். பிறகு அவர்களது அந்த வாதம் வேரூன்றி விட்டது. அவர்களது மார்க்கம் உலகில் பரவியது. மேலும் அது உறுதியாக நிலைத்து விட்டது. அது ஒரு நீண்ட ஆயுளைக் கொண்டதாக இருக்கிறது. நாம் அவர்களது மதங்களின் வேத நூல்களில் தவறு இருப்பதைக் கண்டால் அல்லது அந்த மதத்தைப் பின்பற்றிச் செல்பவர்கள் தீய செயல்களில் சிக்கியிருப்பதைப் பார்த்தால் நாம் இதன் பழியை இந்த மதங்களின் ஸ்தாபகர்கள் மீது சுமத்தக் கூடாது. ஏனென்றால் வேத நூல்களில் இடைச்செருகல்கள் ஏற்படுவது சாத்தியமானதுதான். அனுமானத்தின் அடிப்படையில் ஏற்படுகின்ற தவறுகளை விளக்கவுரைகளில் புகுத்துவது சாத்தியமானது தான். ஆனால் ஏதாவது ஒரு நபர் மிகவும் தெளிவான முறையில் இறைவன் மீது இட்டுக்கட்டி பொய் கூறுகின்றார். தான் நபியென்று கூறி, தனது வசனங்களை எடுத்து வைத்து இது இறைவனின் வசனங்கள் என்று கூறுகின்றார். ஆனால் அவர் நபியாக இல்லாமல் இருந்து அவர் கூறுகின்ற வசனங்களும் இறைவனின் வசனங்களாக இல்லாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் அப்படிப்பட்டவருக்கு உண்மையாளர்களுக்கு வழங்குவது போன்று கால அவகாசம் வழங்குவான் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

இவையெல்லாம் இருந்தும் அல்லாஹ் அவருக்கு உண்மையாளர்களுக்கு வழங்குவது போன்று கால அவகாசம் வழங்குவான் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

உண்மையாளர்களைப் போன்று அவர் (மக்களால்) ஏற்றுக் கொள்ளப்படுவதைப் பரப்புவதும் சாத்தியமற்ற ஒன்றாகும். எனவே, இந்தக் கொள்கை மிகவும் சரியானதும் மிகவும் அருளுக்குரியதாகும். மேலும் அதுவே சமாதானத்தின் அடிப்படையை நிறுவக்கூடியதாக இருக்கும். அதாவது, எவர்களது மார்க்கம் வேரூன்றி விட்டதோ, நீண்ட ஆயுளைப் பெற்று விட்டதோ மேலும் கோடிக்கணக்கான மக்கள் அந்த மார்க்கத்தில் வந்து விட்டார்களோ அப்படிப்பட்ட எல்லா நபிமார்களையும் நாம் உண்மையான நபிமார்களாகக் கருத வேண்டும்.

இந்தக் கொள்கை மிகவும் நல்ல கொள்கையாகும். இந்தக் கொள்கையை முழு உலகமும் பின்பற்றி நடந்தால் அதன் மூலமாக படைப்பினங்களுக்கும் பொதுமக்களின் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கின்ற ஆயிரக்கணக்கான குழப்பங்களும் மதங்களை இழிவுபடுத்துவதும் நீங்கிவிடும். ஒரு மதத்தைப் பின்பற்றிச் செல்பவரைப் பார்த்து தங்களது எண்ணத்தில் பொய்யராகவும், இட்டுக்கட்டிக் கூறுபவராகவும் இருக்கின்ற ஒரு நபரை அவர் பின்பற்றுகிறார் என்று கூறுவதன் மூலமாக இப்படிப்பட்டவர்கள் பல்வேறு குழப்பங்களுக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றார்கள். மேலும் அவர்கள் கண்டிப்பாக பிறரை இழிவுபடுத்தும் குற்றத்திற்கு ஆளாகி விடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் அந்த நபியின் மகிமைக்கு எதிராக மிகவும் தரக்குறைவான சொற்களை கூறுகின்றனர். தங்களது சொற்களை ஏசிப் பேசுகின்ற நிலை வரை கொண்டு செல்கின்றனர். சமாதானத்திற்கும் படைப்பினங்கள், பொதுமக்களின் ஆகியோரின் அமைதிக்கும் குந்தகம் விளைவிக்கின்றனர். அவர்களது இந்த எண்ணம் முற்றிலும் தவறானதாகும். தங்களது தரக்குறைவான கூற்றுகளின் காரணமாக இறைவனது பார்வையில் அவர்கள் அநீதியிழைப்பவர்களாக ஆகி விடுகின்றனர்.

அளவற்ற அருளாளனாகவும் மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனாகவும் இருக்கின்ற இறைவன் ஒரு பொய்யரின் மார்க்கத்திற்கு அநியாயமாக வளர்ச்சியை வழங்கி அதை வேரூன்ற செய்து மக்களை அதன் மூலம் ஏமாற்றுவதை ஒருபோதும் விரும்பமாட்டான். ஒரு நபர் பொய்யராகவும் இட்டுக்கட்டிப் பொய் கூறுபவராகவும் இருந்தும் கூட தனது பார்வையில் அவர் உண்மையான நபிமார்களுக்கு சமமானவர்களாக இருப்பதை ஒருபோதும் அவன் அனுமதிக்கமாட்டான். இந்தக் கொள்கை மிகவும் நேசத்திற்குரியதும், அமைதியை வழங்கக்கூடியதம் சமாதானத்தின் அடித்தளத்தை நிறுவக்கூடியதாகவும் நல்லொழுக்க நிலைமைகளுக்கு உதவக் கூடியதாகவும் இருக்கின்றது. அதாவது உலகில் வந்துள்ள எல்லா நபிமார்களையும் அவர்கள் இந்தியாவில் வந்திருந்தாலும், பாரசீகத்தில் தோன்றியிருந்தாலும், சீனாவில் வந்திருந்தாலும், வேறு எந்த நாட்டில் வந்திருந்தாலும் அவர்களை நாம் உண்மையாளர்களாகக் கருத வேண்டும்.

இறைவன் கோடிக்கணக்கான உள்ளங்களில் அவர்களது கண்ணியத்தையும் மகத்துவத்தையும் நிலைநாட்டியுள்ளான். அவர்களது மார்க்கத்தை வேரூன்றச் செய்து விட்டான். பல நூற்றாண்டுகளாக அந்த மதங்கள் நிலைபெற்று வந்தன. இந்தக் கொள்கையை திருக்குர்ஆன் எங்களுக்கு கற்பித்துள்ளது. இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே நமது இந்த விளக்கத்தின் கீழ் வருகின்ற ஒவ்வொரு மதத்தின் தோற்றுனரையும் நாம் கண்ணியமிக்க பார்வையால் பார்க்கின்றோம். அவர்கள் இந்து மதத்தின் தோற்றுனராகவோ, பாரசீக மதத்தின் தோற்றுனராகவோ, சீன மதத்தின் தோற்றுனராகவோ அல்லது யூத மதத்தின் தோற்றுனராகவோ அல்லது கிறித்தவ மதத்தின் தோற்றுனராகவோ இருந்தாலும் சரியே. ஆனால் வேதனை என்னவென்றால் நமது எதிரிகளுக்கு நம்முடன் இவ்விதமாக நடந்து கொள்ள முடியவில்லை. இறைவனது தூய மாற்ற முடியாத அந்த சட்டம் அவர்களது நினைவில் இல்லை. அதாவது உண்மையான நபிக்கு வழங்கக்கூடிய அந்த கண்ணியத்தையும் பரக்கத்தையும் ஒரு பொய் நபிக்கு அவன் வழங்கமாட்டான். எவ்வாறு உண்மையான நபியின் மதம் வேரூன்றி நிற்க முடியுமோ, மேலும் நீண்ட ஆயுளைப் பெறுமோ அதுபோன்று வேரூன்றி நிற்க முடியாது. அது நீண்ட ஆயுளையும் பெறாது. சமுதாயங்களில் தோன்றிய நபிமார்களைப் பொய்யர்கள் என்றும் தீயவர்கள் என்றும் கூறுகின்ற இத்தகைய கொள்கையுடைய மக்கள் எப்போதும் சமாதானம் மற்றும் அமைதியின் பகைவர்களாகவே இருக்கின்றார்கள். சமுதாயங்களிலுள்ள பெரியோர்களை ஏசிப் பேசுவதை விட அதிகமாக குழப்பத்தை தூண்டக்கூடிய வேறு எந்த செயலும் இருக்க முடியாது.

சில நேரங்களில் மனிதன் மரணிப்பதைக் கூட விரும்புவான். ஆனால் தான் நம்புகின்ற மகானை தீயவர் என்று கூறப்படுவதை அவன் விரும்பமாட்டான். நமக்கு ஏதாவதொரு மதத்தின் போதனைகள் மீது ஆட்சேபனை இருந்தால் அந்த மதத்தைச் சார்ந்த நபியின் மீது நாம் தாக்குதல் நடத்தக் கூடாது. தீய சொற்களால் அவரை நினைவு கூறக்கூடாது. மாறாக, அந்த சமுதாயத்தின் தற்போதைய செயல்களால் அவர்கள் கடைபிடிக்கும் வழிமுறையை மட்டுமே ஆட்சேபனை செய்ய வேண்டும். அதாவது அந்த சமுதாயத்தில் தவறுகள் இருந்தால் அந்த தவறுகளை சுட்டிக்காட்டி ஆட்சேபனை செய்ய வேண்டும். மாறாக, அந்த நபிமார்கள் மீது ஆட்சேபனை செய்யக் கூடாது.

கூறுகின்றார்கள்: உறுதியாக நம்புங்கள். எந்த நபி இறைவன் புறமிருந்து தோன்றி கோடிக்கணக்கான உள்ளங்களில் கண்ணியத்தைப் பெற்று விட்டார்களோ, நூற்றுக்கணக்கான வருடங்களாக மற்றவர்களால் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படும் நிலை இருந்து வருகிறதோ அதுவே அவர் இறைவன் புறமிருந்து வந்தவர் என்பதற்கான உறுதியான சான்றாக இருக்கின்றது. அவர் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் இந்த அளவு அவரால் கண்ணியத்தைப் பெற முடியாது. இட்டுக்கட்டி பொய் கூறுபவருக்கு கண்ணியத்தை வழங்குவதும், கோடிக்கணக்கான அடியார்களிடம் அவர்களது மதத்தைப் பரப்புவதும், மிக நீண்ட காலமாக இட்டுக்கட்டி பொய்யாக கூறப்பட்ட அந்த மதத்தைப் பாதுகாத்து வைப்பது ஆகியவை இறைவனது வழக்கமல்ல.

எனவே எந்த மதம் உலகில் பரவி உறுதிநிலை பெற்று நீண்ட ஆயுளையும் பெற்று விடுகிறதோ அது தனது அசல் தன்மையில் ஒருபோதும் பொய்யானதாக இருக்க முடியாது. அவர்கள் கொண்டு வந்த போதனைகள் ஆட்சேபனை செய்வதற்கு தகுதி உடையதென்றால் அதற்கு மூன்று காரணங்கள் இருக்க வேண்டும் என்று அன்னார் கூறுகின்றார்கள். தற்போதைய காலத்தில் அந்த நபி கொண்டு வந்த போதனை ஆட்சேபனை செய்யத் தகுதியுடையதாக இருக்கின்றதென்றால் அதற்கு மூன்று காரணங்கள்தான் இருக்க முடியும்.

முதலாவது காரணம், அந்த நபி வழங்கிய வழிகாட்டலில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது காரணம் அந்த நபி வழங்கிய வழிகாட்டல்களுக்கு விளக்கம் கூறும்போது அதில் தவறிழைக்கப்பட்டிருக்கின்றது. மூன்றாவது இந்த காரணமும் இருக்க முடியும். அதாவது ஆட்சேபனை செய்யக்கூடிய நாம் சத்தியத்தில் இல்லாமல் இருக்கலாம். ஒரு விசயம் புரியாததன் காரணமாக ஆட்சேபனை செய்யப்படுகிறது. இன்று இதுபோன்று தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்துள்ளனர். வரலாறையும்

இவர்கள் படிக்கவில்லை. சம்பவங்களையும் படிக்கவில்லை. திருக்குர்ஆனையும் இவர்களால் புரிய முடியவில்லை.

கூறுகின்றார்கள்: நாம் பார்க்கின்றோம். சில பாதிரிமார்கள் தங்களது குறைவான புரியும் திறன் காரணமாக திருக்குர்ஆன் கூறும் இவ்விசயங்கள் மீது ஆட்சேபனை செய்கின்றனர். அவை தவ்ராத்திலுள்ள சரியான இறைவனின் போதனைகள்தான் என்பதை இவர்களே ஏற்றுக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட ஆட்சேபனைகள் அவர்களது தவற்றின் காரணமாகவும் அவசரப்படுவதின் விளைவாகவும் இருக்கின்றது.

கூறுகின்றார்கள்: சுருக்கமாக கூறுவதென்றால் உலகத்தின் நலன், அதன் அமைதி, சமாதானம், தக்வா – இறையச்சம் ஆகியவை இந்த நபிமார்களை நாம் பொய்யர்களாக கருதக்கூடாது என்ற இந்த கொள்கையில்தான் இருக்கின்றது. அவர்களது உண்மை தொடர்பான கருத்து கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களில் நூற்றுக்கணக்கான வருடங்களாக நிலைபெற்று விட்டன. தொன்றுதொட்டே இறைவனின் உதவி அவர்களுடன் இருந்து வருகின்றது. நான் உறுதியாக நம்புகின்றேன். உண்மையை விரும்பக்கூடிய ஒருவர் அவர் ஆசியாவைச் சேர்ந்தவராக இருந்தாலும் ஐரோப்பியராக இருந்தாலும் இந்தக் கொள்கையை விரும்புவார். பெருமூச்சு விட்டவாறு அந்தோ! நமது கொள்கையும் இவ்வாறானதாக ஏன் இருக்கவில்லை என்று அவர் ஏங்குவார்.

**பிறகு அவர்கள் ராணிக்கு தொடர்ந்து எழுதுகின்றார்கள்:**

இங்கிலாந்து மற்றும் இந்தியாவின் கண்ணியத்திற்குரிய ராணியே! இந்தக் கொள்கையை நான் உங்கள் முன்னால் வைக்கின்றேன். உலகில் அமைதியைப் பரப்புவதற்கு இந்தக் கொள்கை மட்டுமே உள்ளது.இது நமது கொள்கையாகும்.

இஸ்லாம் தனது இந்த அழகிய கொள்கையைக் குறித்து பெருமை கொள்ள முடியும். இந்த அன்பான உள்ளத்தை ஈர்க்கக்கூடிய கொள்கையை குறிப்பாக அது தன்னுடன் வைத்திருக்கின்றது. இறைவனின் அருளால் ஒவ்வொரு காலகட்டத்திலும் சான்றோர்கள் தமக்கென்று தம்மைப் பின்பற்றக்கூடிய ஓர் உலகை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களின் மகிமையை தகர்க்கும் பணியை நம்மால் எப்படி செய்ய முடியும்? நூற்றுக்கணக்கான வருடங்களாக அரசர்களின் தலைகள் அவர்கள் முன்னால் குனிந்திருந்தன. பொய்யர்களுக்கு உண்மையாளர்களை போன்ற கண்ணியத்தை வழங்கி உண்மையாளர்களைப் போன்றே கோடிக்கணக்கான மக்களுக்கு தலைவராக ஆக்கி அவர்களது மதத்திற்கு நீண்ட ஆயுளை வழங்கி அவர்களது மதத்திற்கு ஆதரவாக விண்ணின் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டி உலகத்தை இறைவன் ஏமாற்ற விரும்புகின்றான் என்று இறைவனைப் பற்றி நம்மால் எப்படி தப்பெண்ணம் கொள்ள முடியும்? இறைவனே நம்மை ஏமாற்றி விட்டால் நாம் நேர்வழி மற்றும் வழிகேடு ஆகியவற்றை எவ்வாறு பிரித்தறிய முடியும்?

கூறுகின்றார்கள்: இது மிகவும் முக்கியமான விசயமாகும். ஒரு பொய் நபியின் மகிமை, உயர்தகுதி, பொலிவு ஆகியவை ஒரு உண்மையான நபியிடமிருந்து எவ்வாறு பரவுகின்றதோ அவ்வாறு பரவ முடியாது. அந்த பொய்யரின் திட்டங்களில் உண்மையாளர்களின் திட்டங்களில் உருவாகின்ற அந்த பொலிவு உருவாக முடியாது. உண்மையாளரின் முதல் அடையாளம் இறைவனது உதவியின் நிரந்தரமான ஒரு தொடர் அவருடன் இருக்கும். இறைவன் அவரது மதத்தின் செடியை கோடிக்கணக்கான உள்ளங்களில் நட்டு விடுகின்றான். அதற்கு ஆயுளையும் வழங்குகின்றான். எந்த நபியின் மதத்தில் இந்த அடையாளங்களை நாம் பார்ப்போமோ அப்போது நாம் நமது மரணம் மற்றும் தீர்ப்பு நாளை நினைவுகூர்ந்து அப்படிப்பட்ட கண்ணியமிக்க தலைவர்களை இழிவுபடுத்தக் கூடாது. மாறாக அவர்களுக்கு உண்மையான கண்ணியத்தையும் அவர்கள் மீது உண்மையான நேசத்தையும் வைக்க வேண்டும்.

சுருக்கமாக இறைவன் நமக்கு கற்றுத் தந்துள்ள முதலாவது கொள்கை இதுவாகும். இதன் மூலமாக நாம் ஒரு பெரிய நல்லொழுக்கப் பண்புக்கு வாரிசாகி விடுகின்றோம். தத்தமது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறும் வகையிலுள்ள மாநாடுகள் நடத்தப்பட வேண்டும் என்றும் அதில் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இப்போது செயலளவில் பார்க்கும் போது இஸ்லாம் தான் உலகில் மிகைத்து நிற்கின்ற ஒரு மார்க்கமாக இருக்கின்றது. ஆனால், எண்ணிக்கையில் அடிப்படையில் பார்க்கும் போது இஸ்லாம் உலகில் இரண்டாவது பெரிய மதமாக இருக்கின்றது. எவ்வாறிருப்பினும், உலகிலுள்ள ஏனைய மதங்களைச் சார்ந்தவர்கள் இஸ்லாத்தை மதிக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வழங்க வேண்டிய மதிப்பை, கண்ணியத்தை அதற்குரிய உரிமையை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறில்லையென்றால் உலகில் குழப்பமும் அமைதியின்மையும் உருவாகும்.

நாம் உலகிலுள்ள மதங்களுக்கு கண்ணியமளிப்பதும், மதிப்பளிப்பதும், அந்த மதத்தின் பெரியவர்கள் மற்றும் நபிமார்கள் ஆகியோரை இறைவன் புறமிருந்து வந்தவர்கள் என்று நாம் கருதுவதும் திருக்குர்ஆன் நமக்கு தந்துள்ள இந்த அழகிய போதனையின் காரணமாகவே இருக்கின்றது. இதை பெருமானார் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்தார்கள். இஸ்லாத்தின் எதிரிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக பொருத்தமற்ற சொற்களை கூறியிருந்தும் கூட தரக்குறைவான படங்களை சித்தரித்துக் காட்டிய பிறகும் கூட நாங்கள் எந்தவொரு மதத்தைச் சார்ந்த நபியையும் பெரியாரையும் அதற்குப் பதில் கூறும் வகையில் அவர்களுக்காக தவறான சொற்களைப் பயன்படுத்தி அழைத்ததில்லை.

இவ்வாறிருந்தும் முஸ்லிம்களை இவர்கள் அமைதியை சீர்குலைக்கின்றனர் என்று கூறி குறி வைக்கின்றனர். முதலில் இந்த மக்கள்தான் அமைதியை சீர்குலைக்கிற பணிகளைச் செய்கின்றனர். உணர்வுகளைத் தூண்டி விடுவதற்கு முயற்சி செய்கின்றனர். பிறகு உணர்வால் அவர்கள் தூண்டப்பட்ட பிறகு இவர்கள் முஸ்லிம்களைப் பார்த்து முஸ்லிம்கள் தீவிரவாதத்தை விரும்பக்கூடியவராக இருக்கின்றார்கள். எனவே, இவர்களுக்கு எதிராக எல்லா விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

நான் கடந்த குத்பாவில் கூறியது போன்று இஸ்லாத்தின் எதிரிகளுக்கு இவற்றையெல்லாம் செய்யும் தைரியம் எப்படி வந்ததென்றால் அதற்கு காரணம் முஸ்லிம்கள் ஒரே அணியில் ஒன்றாக நிற்கவில்லை. அஹ்மதிகளாகிய நம்மை அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கைகளின் கீழ் ஒன்று சேர்த்துள்ளான். உலகிற்கு நேர்வழியைக் காட்ட வேண்டியது நமது பணியாகும். உலகிற்கு அமைதி மற்றும் இரட்சிப்பிற்கான வழிமுறையை நாம் கூற வேண்டும்.

நான் படித்துக் காட்டிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது இந்த தூதுச் செய்தியை முழுமையாக பரப்பி விடுங்கள். அதன் மூலம் உலகிற்கு உண்மையான இஸ்லாமிய போதனைகளைப் பற்றி தெரிய வரும். நமது உள்ளத்திலும் ஒரு உண்மையான முஸ்லிமின் உள்ளத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிய உயர் தகுதி எந்த அளவு உயர்வானதாக இருக்கின்றது என்பதைப் பற்றி உலகவாதிகளுக்கு தெரிய முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனை, அன்னாரது அழகிய முன்மாதிரி எந்த அளவுக்கு அழகானதாக இருக்கின்றது என்றால் ஒரு உண்மையான முஸ்லிமுக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது எந்த அளவு அன்பும் நேசமும் இருக்கின்றது என்பதை எவராலும் கணித்துப் பார்த்து விட முடியாது.

இன்றிலிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்னால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த பேரன்பு, மிகுதியான நேசம் ஆகியவற்றை ஹஸ்ஸான் பின் ஸாபித் அவர்கள் மட்டும் தமது கவிதையில் கூறவில்லை. அவர் தமது கவிதையில்,

முஹம்மது (ஸல்) அவர்களே!
நீங்கள் எனது கண்ணின் மணியாக இருந்தீர்கள்.
இன்று நீங்கள் மரணித்து விட்டதால் எனது கண்கள் குருடாகி விட்டன.
நீங்கள் மரணித்த பிறகு எவர் மரணிப்பது பற்றியும் எனக்கு கவலையில்லை.
உங்களது மரணத்தைப் பற்றியே நான் அஞ்சினேன்.

பெருமானார் (ஸல்) அவர்கள் மரணித்த சமயத்தில் ஹஸ்ஸான் பின் ஸாபித் (ரலி) அவர்கள் இந்தக் கவிதையைக் கூறினார்கள். இந்தக் காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ மவ்ஊது (அலை) அவர்களும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஒரு ஆழமான நேசத்தை நம்மிடம் உருவாக்கியிருக்கின்றார்கள். அவர்கள் ஓரிடத்தில் இந்த பேரன்பின் காட்சியை நம் முன்னால் கொண்டு வருகின்றார்கள்.

நீண்ட அரபிக் கஸீதாவிலிருந்து சில வரிகளை கூறுகின்றேன். கூறுகின்றார்கள்:

ஒரு சமுதாயம் உங்களைக் கண்டுள்ளது. ஒரு உம்மத் என்னை தனது பேரன்பராக மாற்றிய அந்த முழு நிலா பற்றிய செய்தியைக் கேட்டுள்ளது.

அவர்கள் உமது அழகை நினைவுகூர்ந்து உம்மீது கொண்டுள்ள பேரன்பின் காரணமாக அழுகின்றனர். பிரிவின் வேதனையால் ஏற்படும் துக்கத்தின் காரணமாகவும் அவர்கள் அழுகின்றனர்.

நான் பார்க்கின்றேன். உள்ளம் அமைதியற்ற நிலையில் தொண்டை வரை வந்து விட்டது. கண்கள் கண்ணீர் வடிப்பதையும் நான் பார்க்கின்றேன்.

இந்த நீண்ட கஸீதாவின் கடைசி வரிகள் இதுவாகும். நம்மில் பலருக்கும், குழந்தைகளுக்கும் கூட இந்த கஸீதா மனனமாக தெரியும்.

எனது உடல் உங்கள் மீது கொண்ட பேரார்வம் காரணமாக உங்களை நோக்கி பறந்து வர விரும்புகிறது. அந்தோ! எனக்கு பறக்கின்ற ஆற்றல் இருந்திருக்க வேண்டுமே!

நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இத்தகு அன்பு கொள்வதற்கான பாடம் கற்றுத் தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த உலகவாதிகள் இதனால் என்ன ஆகிவிடப் போகிறது? இது ஒரு லேசான நகைச்சுவைதான் என்று கூறுகின்றார்கள். ஒழுக்கம் இந்த அளவு வீழ்ச்சி அடைந்துவிடும் போது, நல்லொழுக்கத்தின் தரம் உயரே செல்வதற்குப் பதிலாக மிகவும் கீழான நிலைக்கு சென்று விடும் போது தான் உலகத்தின் அமைதியும் சீர்குலைந்து விடுகிறது. நாம் அதிகம் முயற்சி செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்க்கையின் பல்வேறு அழகிய அம்சங்களை உலகத்தின் முன்னால் எடுத்து வைக்க வேண்டும். இதற்காக சுருக்கமாக அதே சமயத்தில் ஒட்டுமொத்தமாக இவற்றை விளக்கும் நூலாக Life of Muhammad உள்ளது. அல்லது Introduction to the Study of Holy Quran என்ற நூலிலுள்ள பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான பகுதி இருக்கின்றது. இதனை ஒவ்வொரு அஹ்மதியும் படிக்க வேண்டும். இதில் ஏறக்குறைய பெருமனார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பான எல்லா அம்சங்களும் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அல்லது தேவையான முக்கிய அம்சங்கள் விளக்கிக் கூறப்பட்டுள்ளது என்றும் கூறலாம்.

பிறகு தத்தமது ஆர்வம், இன்பம், அறிவுத்திறன் ஆகியவற்றிற்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையை எடுத்துக் கூறுகின்ற மற்ற நூல்களையும் படியுங்கள். பல்வேறு வழிமுறைகள், தொடர்புகள், கட்டுரைகள், பிரசுரங்கள் ஆகியவற்றின் மூலம் உலகிற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அறிவு, அருள் ஆகியவற்றைப் பற்றி தெரிவியுங்கள். அல்லாஹ் இந்த முக்கியமான பணியை, கடமையை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பை ஒவ்வொரு அஹ்மதிக்கும் வழங்குவானாக! இதுபோன்ற தரக்குறைவான அநீதியான பரிகாசத்தில் ஈடுபடுபவர்கள் அல்லது பகைமையை வெளிப்படுத்துபவர்கள் ஆகிய இவர்களை அறிவுள்ள மக்கள் தாமாகவே மறுத்து விடுகின்ற அளவிலுள்ள அறிவை இந்த உலகிற்கு அல்லாஹ் வழங்குவானாக! அதன் மூலம் உலகம் அமைதியற்ற நிலையிலிருந்தும் பாதுகாப்பாக இருக்கட்டுமாக! அல்லாஹ்வின் தண்டனையிலிருந்தும் அது தப்பிக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனாஸா ஹாஸிர் தொழுகை தொழ வைப்பேன். இந்த ஜனாஸா மதிப்பிற்குரிய மவ்லானா நஸ்ருல்லாஹ் கான் நாஸிர் சாஹிப் உடையதாகும். இவர் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். இவர் செப்டம்பர் 23 ஆம் தேதி மாரடைப்பு காரணமாக வஃபாத் ஆகி விட்டார்கள். இவருக்கு வயது 72. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இன்றைய நாட்களில் இங்கு U.K.லேயே

அவர்கள் இருந்து வந்தார்கள். குஜராத்தைச் சேர்ந்த சவுத்ரி மெஹர் அல்லாஹ் தித்தா சாஹிப் அவர்களின் மகனாவார்கள். இவர்களது தந்தையார் 1918 ஆம் ஆண்டு தமது கிராமத்திலிருந்து நடந்தே ஸியால்கோட்டிற்கு சென்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது கைகளில் பைஅத் செய்தார்கள். மர்ஹூம் நஸ்ருல்லாஹ் கான் நாஸிர் சாஹிப் அவர்கள் 1960 ஆம் ஆண்டு தமது வாழ்வை அர்ப்பணித்தார்கள். ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் சேர்ந்தார்கள்.

கல்வி கற்கும் காலத்தில் அவர் முதன் முறையாக கலீஃபாவை அவரது பதவியிலிருந்து யாரும் அகற்ற முடியாது என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அந்தக் கட்டுரை ரப்வாவில் அல் ஃபஸ்ல் பத்திரிகையில் வெளி வந்தது. அறிவிப்பூர்வமான விசயங்களில் அவருக்கு ஆர்வம் இருந்தது. அதனால் அவர் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் பத்திரிகையான முஜல்லாத்துல் ஜாமிஆவின் எடிட்டராக நியமிக்கப்பட்டார். ஜமாஅத்தின் பத்திரிகைகளிலும் நாளிதழ்களிலும் கட்டுரைகளை எழுதுவதற்கான திறமை அவர்களிடம் இருந்தது. அவற்றில் கட்டுரைகளை அவர்கள் எழுதி வந்தார்கள்.

ஜாமிஆவிலிருந்து வெளியேறிய பிறகு 1983 ஆம் ஆண்டு வரை பாகிஸ்தானிலுள்ள பல்வேறு ஜமாஅத்துகளில் முரப்பியாக இவர் தொண்டு புரிந்து வந்தார். உள்ளூர் இஸ்லாஹ்-வ-இரஷாத்திலும் தலைமையக அலுவலகத்தில் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு அவருக்கு கிடைத்தது. 1994 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரை அன்ஸாருல்லாஹ் மாத இதழின் எடிட்டராக இவர்கள் இருந்தார்கள். இதன் காரணமாக இவர் மீது பல வழக்குகள் தொடரப்பட்டது. இதன் காரணமாக அவருக்கு வழக்குகளில் ஆஜராவதற்காக ரப்வாவிலிருந்து கராச்சி, சிந்து மற்றும் ஏனைய பல நகரங்களுக்கும் செல்ல வேண்டியது வந்தது. சில நேரங்களில் மிக விரைவாக அடுத்தடுத்து வழக்கில் ஆஜராவதற்கான தேதிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் இவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தும் கூட வயதானவராக இருந்தும் மிகவும் தைரியத்துடன் இதற்காக சென்று வந்தார்கள். மிகவும் வீரத்துடன் இவர்கள் இந்த வழக்குகளை சந்தித்தார்கள். சில நேரங்களில் நீதிமன்றத்தில் மிகவும் மோசமான நிலைமை ஏற்பட்டது. அவநம்பிக்கை ஏற்படும் நிலை இருந்தது. சில நேரங்களில் எதிரிகள் மிகவும் கடுமையாக நடந்து கொண்டார்கள். அல்லாஹ் இவருக்கு தைரியத்தை வழங்கினான். இவர் மீது தொடுக்கப்பட்ட வழக்குகள் அனைத்திலும் இவர்களே ஆஜராகினார்கள். தாருல் கஸாவில் காஸியாக தொண்டு புரிகின்ற நல்வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. அஸ்ஹாபே சித்க்-ஒ-சவா என்ற ஒரு நூலையும் இவர் எழுதியுள்ளார். அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது 313 சஹாபாக்களின் வாழ்க்கை குறிப்புகளை எழுதியிருந்தார்கள். இதை தவிர இன்னும் பல நூல்களும் அவரால் எழுதப்பட்டுள்ளது. மிகவும் அதிகமாக துஆ செய்யக் கூடியவராகவும் நல்ல இயல்புள்ள எளிமையாக நடந்து கொள்கின்ற இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ள மனிதராக இவர் இருந்தார். மிகவும் மென்மையாக செயல்படும் இயல்புள்ளவராக இருந்தார். விசுவாசமிக்க மனிதராவார். மர்ஹூம் வஸிய்யத் செய்திருந்தார்.

அல்லாஹ் இவரது பாவங்களை மன்னிப்பானாக! தனது திருப்தியின் சுவர்க்கத்தில் உயர்வான இடத்தை வழங்குவானாக! அல்லாஹ் இவரது பிள்ளைகளுக்கும் இவரது நன்மைகளை தொடர்ந்து நீடிக்க செய்வதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக!

ஜுமுஆ தொழுக்கைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா ஹாஸிர் தொழுகையை நான் வெளியே சென்று தொழ வைப்பேன். நீங்கள் பள்ளிவாசலுக்குள் ஸஃப் -ஐ சீராக வைத்திருங்கள்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAITUL FUTUH MOSQUE, LONDON.
**ON 28.09.2012**

Translated by : Maulavi M. RAFEEQ AHMAD H.A.
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456